| O.S.No. 330/2023 | DW1: திருமதி. மல்லிகா<br>க/பெ. திரு. தேவேந்திரன் | 16-03-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. எனக்கு எழுத படிக்க தெரியும். கல்யாணத்திற்கு முன்னர் எனது கணவர், அவரது சகோதரர்களுக்குள் நடந்த விஷயம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் தெரியும். எனது சொந்த ஊர் வீரசம்மனூர். எனக்கு 1985–ல் திருமணமானது. நாங்கள் காஞ்சிபுரத்தில் குடியேறினோம். தேவேந்திரனின் தந்தை எப்போது இறந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. எனக்கு என்ன வயதில் திருமணம் நடந்தது என்று தெரியவில்லை. தற்போது எனக்கு 62 வயதாகிறது.

2. தாவா சொத்தினை எனக்கு திருமணமானதற்கு முன்னர் யார் அனுபவித்து வந்தனர் என்றால் எனது பாட்டியும் எனது கணவரும் அனுபவித்து வந்தனர். எனது திருமணத்திற்கு முன்னர் தாவா சொத்து யாருக்கு பாத்தியமானது என்றால் எனது கணவரும், பாட்டிக்கும் உரிமையானது. எனது பாட்டி பெயர் முனியம்மாள். தாவா சொத்தினை தேவேந்திரன் கிரையம் வாங்குவதற்கு முன்னர் எனது பாட்டி பெயரிலும், எனது கணவர் பெயரிலும் சொத்து இல்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தினை எனது கணவர் யாரிடம் கிரையம் வாங்கினார் என்ற விஷயம் எனக்கு தெரியாது என்றால் சின்னப்ப கவுண்டரிடமிருந்து கிரையம் வாங்கினார்.

3. தாவா சொத்துக்கான பட்டா வாதிகள் பெயரில்தான் பட்டா உள்ளது என்றால் சரிதான், அது போலியானதாகும். தாவா சொத்துக்கான பட்டா வாதிகள் பெயரில் எத்தனை ஆண்டுகளாக உள்ளது என்றால் 1995–ல் வாங்கினார்கள். தாவா சொத்தினை 30 ஆண்டுகளுக்கும் மேலாக வாதிகள் பெயரில் பட்டா இருந்து வாதிகள் அனுபவித்து

வருகிறார்கள் என்றால் இல்லை. 31 வருடங்களாக வாதிகள் பெயரில் பட்டா இருந்து வருகின்ற நிலையிலும், வாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகின்ற நிலையிலும் அதனை எதிர்த்து ஆட்சேபணை எதுவும் செய்தீர்களா என்றால் 26 சென்ட் எங்களது அனுபவத்தில் உள்ளதால் ஆட்சேபணை செய்யவில்லை. தாவா சொத்து மொத்தம் 26 சென்ட் ஆகும். தாவா சொத்தினை 4 எல்லைகள் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது.

4. 31 வருடங்களாக வாதிகள் பெயரில் பட்டா இருந்து வருவதை தெரிந்துகொண்டு காஞ்சிபுரத்தில் வசித்து வருகிறோம் என்றால் என் கணவர் இறக்கும் வரையில் அமைதியாக இருந்தோம், அதன்பிறகு தாலுக்கா அலுவலகத்தில் மனு கொடுத்தோம், அவர்கள் எடுக்கவில்லை. தாலுக்கா அலுவலகத்தில் மனு கொடுத்தது இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு பிறகுதான். பி.சா.ஆ.1 புகாரினை இவ்வழக்கு தாக்கல் செய்ததற்கு பிறகுதான் கொடுத்தேன் என்றால் சரிதான். புகார் கொடுத்ததற்கு ஆதரமாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் அவர்கள் குறிப்பு எதுவும் கொடுக்கவில்லை. நான் அவ்வாறு புகார் கொடுத்திருந்தால் அதற்கான ரசீது தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. பட்டா உட்பிரிவு செய்வது சம்மந்தமாக வாதிகள்தான் மனு கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எங்களுக்கும் பாதிபாகம் உரிமை உள்ளது என்றும், அதனால் பட்டாவினை உட்பிரிவு செய்துகொள்ளலாம் என்ற 2-ம் வாதி கன்னியப்பன் என்னை அழைத்தார் என்றாலும், நாங்கள் அதற்கு உடன்படவில்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

ஒம்/- மல்லிகா

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.16 17:13:18 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**செய்யாறு.**